டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்..,
எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER
★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 134 | 08.11.2025 | SATURDAY | IPPASI : 21 | PRICE : RS.5/-
மலர் : 01 | இதழ் : 134 | 08.11.2025 | சனிக்கிழமை | ஐப்பசி : 21 | விலை : ரூ.5/–

3 "பெண்கள் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கியதற்கு வெட்கி தலைகுனிய வேண்டாமா?" ஸ்டாலினுக்கு இபிஎஸ் கண்டனம்

4 "மனநலம் பாதிக்கப்பட்டவர் போல டிடிவி தினகரன் பேசி வருகிறார்" - ஆர்.பி. உதயகுமார் காட்டம்

2 வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தமிழக மக்களின் ஓட்டுரிமைக்கு எதிரானது: மதிமுக தீர்மானம்

# தமிழ்நாட்டில் வாக்குத் திருட்டு நடக்க விடக்கூடாது! : முதல்வர் ஸ்டாலின் பேச்சு

சென்னை: நவ.8-

கர்நாடகா, ஹரியானா போல் தமிழ்நாட்டில் வாக்குத் திருட்டு நடக்க விடக்கூடாது, வருமுன் காப்பது நமது கடமையாக இருக்க வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற செங்குன்றம் பேரூராட்சி மன்ற முன்னாள் துணை தலைவர் பாபுவின் இல்லத் திருமண விழாவில் முதல்வர் ஸ்டாலின் கலந்துகொண்டார். விழாவில் பேசிய அவர், "எஸ்ஐஆர் எனச் சொல்லப்படும், ஒரு சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் தமிழ்நாட்டில் தொடங்கியிருக்கிறது. இந்த மாதம் நான்காம் தேதியில் இருந்து டிசம்பர் மாதம் 4ம் தேதி வரையில் அது நடைபெறுகிறது என்பதெல்லாம் உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் இதை எதிர்த்து தமிழ்நாட்டில் அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டி நாம் தீர்மானம் போட்டு அந்த அடிப்படையில் உச்ச நீதிமன்றத்திற்கு நாம் சென்றிருக்கிறோம். வழக்கு தொடுத்து, அந்த வழக்கு நடந்து கொண்டிருக்கிறது.

சட்டப் போராட்டம் ஒரு பக்கம் என்று சொன்னாலும், வாக்காளர் பட்டியல் திருத்தப்படும் பணிகள் ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்கிறது. அதைக் கண்காணிக்க வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. அது, இன்றைய நிலையில் மிக மிக அவசியமான ஒன்று என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. அதற்காக வருகிற நவ.11ம் தேதி மாவட்டத் தலை நகரங்களில் நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் ஆர்ப்பாட்டத்தை நாம் நடத்த இருக்கிறோம் என்ற



செய்தியைக் கூட நேற்றைக்கு நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

எனவே அந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று, நாம் நம்முடைய உணர்வை வெளிப்படுத்த இருக்கிறோம். ஏற்கெனவே வெளியிடப்பட்ட பட்டியல் அடிப்படையில், ஙி.லி.ளி.க்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று படிவங்களைத் தந்து கொண்டிருக்கிறார்கள் என்பது உங்களுக்கு தெரியும். இரண்டு நாட்களாகத் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. டிசம்பர் மாதம் 4ம் தேதிக்குள் இந்தப் படிவங்களை நிரப்பி அதைச் சமர்ப்பித்தாக வேண்டும். அவ்வாறு அளிக்கப்படும் பெயர்கள் மட்டும்தான் வாக்காளர் பட்டியலில் இடம்பெறும் என்ற ஒரு நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கிறது.

தேர்தல் ஆணையத்தைப் பொறுத்தவரைக்கும், டிசம்பர் மாதம் 4ம் தேதி வரையில் மூன்று முறை அவர்கள் வர இருக்கிறார்கள். நாம் வேலைக்குச் சென்று விட்டால், ஏதாவது பணிகளுக்குச் சென்று விட்டால், வீட்டில் இல்லாமல் இருந்தால், நம்முடைய வாக்கு உரிமையை இழக்கும் சூழ்நிலை ஏற்பட்டுவிடும். அதனால், இந்தப் பணி முடிந்த பிறகு ஆன்லைனில் நாம் தொடர்பு கொண்டு சேர்க்கின்ற முயற்சி இருக்கிறது. அது தேர்தல் நேரத்தில் எவ்வளவு பெரிய நெருக்கடி எல்லாம் ஏற்படும் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே, குறிப்பாக ஏழை, எளியவர்கள், உழைப்பாளர்கள், கிராம மக்கள் இதனால் கடுமையாக பாதிக்கப்பட இருக்கிறார்கள்.

இது தொடர்பாக ஏதேனும் சந்தேகம் இருந்தால் அதற்கு ஒரு தொலைபேசி எண்ணை தேர்தல் ஆணையம் தந்திருக்கிறது. ஆனால் அதை மட்டுமே நம்பி நாம் ஏமாந்துவிடக் கூடாது. அதனால் தான் நம்முடைய கட்சியைப் பொறுத்த வரைக்கும், நம்முடைய சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழகத்தின் சட்டத்துறைச் செயலாளர் நம்முடைய மூத்த வழக்கறிஞர் இளங்கோ மேற்பார்வையில் உதவி மையம் அமைத்திருக்கிறோம்.

திமுக நிர்வாகிகள் உதவிக்காக ஒரு தொலைபேசி எண்ணையும் அறிவித்திருக்கிறோம். திமுக நிர்வாகிகள் அனைவரும் உங்களுக்கு ஏதேனும் உதவிகள் தேவைப்பட்டால், அந்தத் தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ள வேண்டும். எஸ்ஐஆர் தொடர்பாக எந்தக் குழப்பம் இருந்தாலும் இதில் நீங்கள் கேட்டுத் தெளிவு பெறலாம்.

அதுமட்டுமல்ல, நம்முடைய காங்கிரஸ் பேரியக்கத்தின் இளம் தலைவராக விளங்கிக் கொண்டிருக்கும் ராகுல் காந்தி இதற்காகப் பெரிய போராட்ட இயக்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறார். குறிப்பாக, கர்நாடகா, ஹரியானா பகுதிகளில் எந்த அளவிற்கு வாக்குத் திருட்டு நடந்திருக்கிறது என்று எல்லாம் ஆதாரப்பூர்வமாக எடுத்து வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்.

அப்படி ஒரு நிலை தமிழ்நாட்டில் நடக்க விடக்கூடாது. வருமுன் காப்பது நமது கடமையாக இருக்க வேண்டும். இந்தப் பெரும் பொறுப்பை கழகத்தின் ஙிலிகி 2க்கள் ஒவ்வொருவரும் செய்தாக வேண்டும். தமிழ்நாட்டின் ஜனநாயகத்தைக் காக்கும் காவலர்களாகக் திமுக பூத் ஏஜெண்டுகள் செயல்பட வேண்டும்" என்று வலியுறுத்தினார்.





■ மக்கள் நீதி மய்யம் தலைவர் கமலஹாசன் பிறந்த நாளை முன்னிட்டு மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள அரியூர் கிராமத்தில் அமைந்துள்ள லியோ லைஃப் முதியோர் காப்பகத்தில், சோழவந்தான் மாவட்ட செயலாளர் மெடிக்கல் ரமேஷ் தலைமையில் முதியோர்களுக்கு இனிப்பு மற்றும் அன்னதானம் வழங்கி பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. அழகாபுரி ஊராட்சியில் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது. இதில் மாவட்ட துணை செயலாளர் விமல்ராஜ், மாவட்ட பொருளாளர் பொதும்பு ரமேஷ், ஒன்றிய செயலாளர் ரவி, ஊராட்சி செயலாளர்கள் சங்கீதா விஜயராமன், வார்டு செயலாளர்கள் செந்தில் முருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

அழையுங்கள்! வாசகர்களே!!
தங்கள் பகுதிகளில் நடக்கும் தாங்கள் காணும் விரும்பத்தகாத செயல்கள், அவலங்கள், சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகள், பெண்களுக்கு எதிரான கொடுமைகள் மற்றும் சமூகத்தில் நடக்கும் தங்களால் தட்டிக் கேட்க இயலாத அநீதிகளை எங்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தவும். (ரகசியம் பாதுகாக்கப்படும்)
(24 x 7)
88705 00000
sakkraviyugam2025@gmail.com

## ஆத்தூர் தொகுதியில் தகுதியுள்ள நபர்களுக்கு ஒருபைசா செலவில்லாமல் அரசு பணி திராவிட மாடல் ஆட்சியின் சாதனையாக உள்ளது ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதம்

### ஆத்தூர் தொகுதியில் அரசுபணிக்கு ஒரு ரூபாய் கூட வாங்காமல் 500க்கும் மேற்பட்டோருக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது ஐ.பெரியசாமி

சின்னாளபட்டி, நவ.8-

ஆத்தூர் தொகுதியில் தகுதியுள்ள நபர்களுக்கு ஒருபைசா செலவில்லாமல் அரசு பணி வழங்கப்பட்டு வருது திராவிட மாடல் ஆட்சியின் சாதனையாக உள்ளது என்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக கூறியதோடு ஆத்தூர் தொகுதியில் அரசுபணிக்கு ஒரு ரூபாய்கூட வாங்காமல் 500க்கும் மேற்பட்டோருக்கு பணிநியமன ஆணை வழங்கப்பட்டது சாதனையாக உள்ளது என்றார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும், திமுக மாநில துணை பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்களிடம் ஆத்தூர் தொகுதியைச் சேர்ந்த பொது மக்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் தங்கள் பகுதிக்கு தேவையான நலத்திட்ட உதவிகள் குறித்த கோரிக்கை மனுக்களை கொடுத்து தீர்வு பெற்றனர். ஒருசிலர் தங்கள் பகுதியி; உள்ள கோயில்களை புணரமைக்கவும், புதிதாக




கட்டவும் நிதியுதவி வேண்டி மனு கொடுத்தனர். பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பெற்று உடனடியாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்பு கொண்டு பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற உத்தரவிட்டதோடு நலத்திட்ட பணிகள் அப்பகுதியில் முறையாக நடைபெறுகிறதா என்பதை கண்காணிக்க வேண்டுமென கட்சி நிர்வாகிகளுக்கு உத்தரவிட்டார். அப்போது கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் ஆத்தூர் தொகுதியில் தகுதியுள்ள நபர்களுக்கு ஒருபைசா செலவில்லாமல் 500க்கும் மேற்பட்டோருக்கு அரசு பணி வழங்கப்பட்டிருப்பது திராவிட மாடல் ஆட்சியின் சாதனை என்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக கூறினார். அதன்பின்னர் மாவட்ட திமுக அலுவலகத்திற்கு சென்று பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றார். நிகழ்ச்சியின் போது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், அமைச்சரின் உதவியாளர் வத்தலகுண்டு ஹரிஹரன், பொதுக்குழு உறுப்பினர் அக்பர் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, ஒன்றிய இளைஞர் அணயி அமைப்பாளர் பன்றிமலை முத்துகிருஷ்ணன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், 7வது வார்டு திமுக நிர்வாகிகள் நரசிங்கம், வீரபாண்டி உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

## சொந்த உபயோக பயன்பாட்டு இருசக்கர, நான்கு சக்கர வாகனங்கள் வாடகைக்கு கோவை வட்டார போக்குவரத்து அலுவலர்கள் அதிரடி நடவடிக்கை

நீலகிரி, நவ.8-

ஊட்டியில் இருசக்கர வாகனங்கள் பறிமுதல் கோவையில் இருந்து ஊட்டிக்கு சட்டத்துக்கு விரோதமாக சொந்த உபயோக பயன்பாட்டில் உள்ள இருசக்கர வாகனங்கள், நான்கு சக்கர வாகனங்களை வாடகைக்கு கொடுக்கும் முறை பல நாட்களாக கோவை மற்றும்



சுற்று வட்டாரங்களில் சட்டத்துக்கு விரோதமாக செயல்பட்டு வருகிறது. இது கோவையில் உள்ள மையப் பகுதியில் வெளிப்படையாகவே இந்த வாடகை பைக்குகள் வாடகைக்கு விடப்படுகிறது. இரண்டு நாட்களாக கோவை வட்டாரப் போக்குவரத்து அலுவலர் சார்பாக, இந்த வாடகைக்கு ஓட்டப்படும் இருசக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனங்களை பறிமுதல் செய்து, கோவை வட்டார போக்குவரத்து அலுவலர்கள் நடவடிக்கை எடுத்துள்ளது, வாடகை டாக்ஸி ஓட்டுநர்கள் இடையே மகிழ்ச்சியை அளித்துள்ளது. இதைத் தொடர்ந்து வட்டார போக்குவரத்துக் கழகங்கள் கவனித்து வாடகை டாக்ஸி ஓட்டுநர்கள் மற்றும் ஆட்டோ ஓட்டுநர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவுமாறு அனைத்து ஓட்டுநர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தமிழக மக்களின் ஓட்டுரிமைக்கு எதிரானது: மதிமுக தீர்மானம்

சென்னை, நவ.08-

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தமிழக மக்களின் ஓட்டுரிமைக்கு எதிரான செயல் என மதிமுக நிர்வாகக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகக் குழுக் கூட்டம், கட்சியின் அவைத் தலைவர் ஆடிட்டர் ஆ.அர்ஜுனராஜ் தலைமையில் இன்று (வெள்ளிக் கிழமை) காலை சென்னை எழும்பூரில் நடைபெற்றது. கூட்டத்தில் கழகப் பொதுச்செயலாளர் வைகோ சிறப்புரை ஆற்றினார். பின்னர் கூட்டத்தில் 5 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானம் 1: இந்தியாவில் தமிழ்நாடு உள்பட பத்து மாநிலங்கள் மற்றும் இரண்டு யூனியன் பிரதேசங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணிகள் (எஸ்ஐஆர்) தேர்தல் ஆணையம் அறிவித்தபடி நவம்பர் 4ஆம் தேதி தொடங்கப்பட்டுள்ளது.

நவம்பர் மாதம் பிஹாரில் சட்டமன்றத் தேர்தல் நடக்கவுள்ள நிலையில், அங்கு வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தம் மூலம் வாக்காளர் பட்டியலில் இருந்து லட்சக்கணக்கில் உண்மையான வாக்காளர்கள் நீக்கப்பட்ட தகவல்கள் வெளியாகி அங்கு எதிர்கட்சிகள் எதிர்த்து வருகின்றன.

தேர்தலுக்கு மிக நெருக்கத்தில் அதுவும் பருவமழைக் காலமான நவம்பர், டிசம்பர் மாதங்களில் எஸ்ஐஆர் மேற்கொள்வது நடைமுறைச் சவால்கள் நிறைந்தது என தமிழ்நாடு முதல்வர் கூறியுள்ளார். அவசரகதியில் செய்யப்படும் எஸ்ஐஆர் நடவடிக்கை என்பது மக்களின் வாக்குரிமையைப் பறித்து, பாஜகவுக்கு சாதகமாக தேர்தல் ஆணையத்தால் நடத்தப்படும் சதியாக அமைந்துள்ளது.

குடிரியுரிமை திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் ஒருவரின் குடியுரிமையை தீர்மானிப்பதை எஸ்ஐஆர் பணியுடன் இணைத்துள்ளனர். அதைச் செய்வதற்கு தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் இல்லை. 2003 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்த த்தைப் போல இதைப் பார்க்க முடியாது. இந்தத் திட்டம் மிக ஆபத்தானது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தின் விளைவு என்பது பிஹாரில் நிரூபிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் இந்தப் பிரச்சினை முன்வைக்கப்பட்டாலும், தேர்தல் ஆணையத்திடம் இருந்து முறையான பதில் வரவில்லை.

தமிழ்நாட்டில் நவம்பர் 4 ஆம் தேதி முதல் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணிகள் தொடங்கி, டிசம்பர் 9 வரையில் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணிகளும் டிசம்பர், 9 அன்று புதிய வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளதாக இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

பொதுமக்களிடம் ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவை டிசம்பர் 9 முதல் ஜனவரி 8 வரை பெறப்பட உள்ளது. 2026 ஆம் ஆண்டு ஜனவரி 31 வரை இந்தப் பணிகள் நடக்க உள்ளன. பிப்ரவரி 7 அன்று இறுதி வாக்காளர் பட்டியல் வெளியாக உள்ளதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. மூன்று மாத காலத்தில் இந்த பணிகளை முடிப்பதற்கு கால அவகாசம் போதுமானது அல்ல.

பிஹாரில் வாக்காளர் திருத்தப் பட்டியலில் நடந்த முறைகேடுகளை தமிழ்நாட்டிலும் செயற்படுத்த முனைந்துள்ள ஒன்றிய பாஜக அரசின் கைப்பாவையான தேர்தல் ஆணையத்தின் முயற்சிகளை ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ள அனைத்துக் கட்சிகளும் முறியடிப்பது தலையாய கடமை என்பதை மதிமுக நிர்வாகக்குழு தெரிவித்துக் கொள்கின்றது.

தீர்மானம் 2: நெல்லையில் 03.11.2025 அன்று அறப்போர் இயக்கம் சார்பில், கல் குவாரிகளால் பாதிக்கப்பட்ட மக்களிடம் நடத்தப்பட்ட கருத்துக் கேட்புக் கூட்டத்தில், 25க்கும் மேற்பட்டோரைக் கொண்ட கும்பல் புகுந்து, வன்முறையில் ஈடுபட்டு தாக்கியுள்ளது. இத்தாக்குதலில் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சுரேஷ் உள்ளிட்ட பகுதி மக்கள் காயமடைந்துள்ளனர்.

இக்கூட்டத்தில் வழக்கறிஞர் ஏ.சுரேஷ் தலைமையிலான குழு, மக்கள் கருத்துகளைக் கேட்டறிந்தது. இந்தக் குழுவில் சுரேஷ் தவிர தன்னாட்சி அமைப்பு கிராம சபை வல்லுநர் நந்தகுமார், நீர் மேலாண்மை நிபுணர் உதயகுமார், சுற்றுச் சூழல் நிபுணர் தணிகைவேல், விவசாய மேலாண்மை நிபுணர் நந்தினி ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இந்த நிகழ்வில் 100க்கும் மேற்பட்ட மக்கள் பங்கெடுத்து தாங்கள் சந்தித்து வரும் பாதிப்புகள் குறித்துத் தெரிவித்தனர்.



அதிகமான கல் குவாரிகள் இருக்கக்கூடிய ராதாபுரம் பகுதியிலிருந்து பெரும்பான்மையான மக்கள் வந்து தாங்கள் சந்திக்கும் பிரச்சினைகள் குறித்துத் தெரிவித்தனர். முக்கியமாக அதிகப்படியான வெடி வெடிப்பதால் வீடுகள் அதிர்வது, நிலத்தடி நீர் பாதிப்பு ஏற்படுவது, குவாரி வேலைகளால் ராதாபுரம் வாய்க்காலில் தண்ணீர் வராதது மற்றும் விவசாய பாதிப்பு குறித்து மக்கள் பேசினர்.

மேலும் ஆலங்குளம், பொன்னாக்குடி, கயத்தாறு, தாதநூத்து, அடைமிதிப்பான்குளம், ரெட்டியார்பட்டி, தாழையூத்து, தச்சநல்லூர், திருவைகுண்டம், ஆழ்வார்திருநகரி, திசையன்விளை, அம்பாசமுத்திரம் போன்ற பல இடங்களிலிருந்தும் குவாரிகளால் தங்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் மக்கள் எடுத்துரைத்தனர். அப்போது உள்ளே நுழைந்து தாக்குதல் நடத்திய வன்முறைக் கும்பல் மற்றும் பின்னணியில் இருப்போரைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கல் குவாரிகளால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து தமிழ்நாடு அரசு பாதிக்கப்பட்ட மக்களிடம் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்த வேண்டும். அதில் மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் கணக்கிட்டு இழப்பீடு வழங்க வேண்டும். சட்ட விரோதமாக இயங்கும் கல் குவாரிகளுக்கு உடனடியாக தடை விதிக்க வேண்டும். முறைகேடாக இயங்கிய, இழப்புகள் ஏற்படுத்திய கல் குவாரி நிறுவனங்களுக்கு அபராதம் விதிப்பதோடு, சட்டவிரோதமாக குவாரியை இயக்கியவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மதிமுக வலியுறுத்துகிறது.

தீர்மானம் 3: கடந்த அக்டோபர் 8 ஆம் தேதி ஒன்றிய தொழிலாளர் அமைச்சகத்தால் தயாரிக்கப்பட்ட தேசிய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கை வரைவு பொது மக்களின் கருத்துக்கேட்பிற்காக வெளியிடப்பட்டது. ஆனால், இந்த வரைவு அறிக்கை சமூக, பொருளாதார, பாலின சமத்துவமின்மையை வலியுறுத்தும் மனுஸ்மிருதி அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது என விமர்சனங்கள் எழுந்துள்ளன. இந்த வரைவுக் கொள்கையில், உழைப்பு என்பதை 'ராஜதர்மம்' என வரையறுத்துள்ளது. இதில் "சமூக ஒற்றுமை, பொருளாதார ரீதியான வளமான வாழ்வு, மற்றும் சமூக நல்லிணக்கம் ஆகியவற்றை நிலைத்து நீடிக்கச் செய்வதில் உழைப்பு செலுத்துவது என்பது புனிதமான மற்றும் தார்மீக கடமையாகும்.

"இந்திய உலகக் கண்ணோட்டத்தின் படி, வேலை என்பது வெறும் வாழ்வாதாரத்திற்கானது மட்டுமல்ல. அது பரந்த தர்மத்திற்கு (பிறப்பின் அடிப்படையிலான கடமை) செய்யும் பங்களிப்புமாகும். இந்தக் கண்ணோட்டம் என்பது, அனைத்துத் தொழிலாளர்களையும் (கைவினைஞர்கள், விவசாயிகள், ஆசிரியர்கள் அல்லது தொழிலாளர்கள்) சமூக உருவாக்கத்தில் ஒரு அத்தியாவசிய பங்கேற்பாளராக அங்கீகரிக்கிறது.

"மனு ஸ்மிருதி, யாக்ஞவல்கிய ஸ்மிருதி, நாரத ஸ்மிருதி, சுக்ரநீதி மற்றும் அர்த்தசாஸ்திரம் போன்ற பண்டைய நூல்கள் ராஜதர்மம் என்ற நெறிமுறைகளை வெளிப்படுத்துகின்றன. நீதி, நியாயமான ஊதியம் மற்றும் தொழிலாளர்களைச் சுரண்டலிலிருந்து பாதுகாப்பது ஆட்சியாளரின் கடமை என வலியுறுத்துகிறது." என இந்த வரைவு அறிக்கை தெரிவிக்கிறது.

ஆனால், பண்டைய காலங்களில் தொழிலாளர்களுக்கு எந்த உரிமைகளும் இல்லை; கூலி முறையும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டி, பண்டைய இந்து நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட கொள்கைக்குப் பின்னால் உள்ள நோக்கத்தை நிபுணர்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

உழைப்பை தர்மம் அல்லது ராஜதர்மத்துடன் ஒப்பிடுவது என்பது ஒரு மோசமான யோசனையாகும். ஏனெனில், அது தொழிலாளர்களின் உரிமைகள், நியாயமான ஊதியம் மற்றும் பாதுகாப்பைப் புறக்கணிக்கிறது.

இந்துத்துவக் கருத்தியலின் இன்னொரு பரிணாமாக வெளியிடப்பட்டுள்ள தேசிய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புக் கொள்கை வரைவைக் கைவிடுவதுடன், தொழிற்சங்க அமைப்புகளின் கருத்துகளை அறிய வேண்டும் என்று மதிமுக வலியுறுத்துகிறது.

தீர்மானம் 4: தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்பு வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தம் கொண்டு வருவது வாக்காளர்களை நீக்கும் தந்திரம். பிஹாரில் நடந்த இப்பணிக்கு எதிரான வழக்கில் இறுதி உத்தரவு இன்னும் பிறப்பிக்கவில்லை.

இச்சூழலில் தமிழகத்தில் இதனை செய்வது ஜனநாயகத்துக்கு எதிரானது. தமிழகத்தில் தேர்தல் நடக்க சில மாதங்களே உள்ள நிலையில் இப்பணியை ஏற்க முடியாது. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் காலகட்டத்தில் பண்டிகைகள் வருவதால் வாக்காளர் பட்டியலில் சேர விரும்பும் வாக்காளர்களின் பெயர் விடுபட நேரிடும்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தமிழக மக்களின் ஓட்டுரிமைக்கு எதிரான செயல் என்பதால் இதனைக் கண்டித்து திமுக தலைமையிலான இந்தியா கூட்டணி சார்பில், நவம்பர் 11 ஆம் தேதி மாவட்டத் தலைநகரங்களில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மறுமலர்ச்சி திமுக நிர்வாகிகளும் தொண்டர்களும் பெருமளவில் பங்கேற்க வேண்டும் என்று கழக நிர்வாகக் குழு கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் 5: அரசியல் கட்சிகள் பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்கு அரசின் சார்பில் விதிமுறைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. அதில், பொதுக்கூட்டங்களுக்கு அனுமதி வழங்க வைப்புத் தொகை ஒரு லட்சம் முதல் இருபது லட்சம் வரை செலுத்த வேண்டும் என்றும், அரசியல் கட்சிகள் குறிப்பிட்டதைவிட பொதுக்கூட்டத்தில் 50 சதவிகிதம் பேர் பங்கேற்றால் வைப்புத் தொகை திருப்பித் தரப்படாது என்றும் கூறப்பட்டிருப்பது நடைமுறைச் சிக்கல்களை ஏற்படுத்தும்.

மேலும் சாலைப் பேரணி நடத்துவதற்கும் தேசிய நெஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை அல்லது ஊராட்சி அமைப்புகளிடம் அனுமதி பெற வேண்டும் என்பது கட்டாயம் என்று சொல்லப்படுகிறது. நம்முடைய நிர்வாக முறையில் இது கூடுதல் கால விரயத்தை எற்படுத்துவதாகவும், அரசியல் கட்சிகளின் அடிப்படை ஜனநாயக உரிமையை பறிப்பதாகவும் அமைந்துவிடும். மேலும் அரசியல் கட்சிகளின் செயல்பாடுகளை அதிகார வர்க்கம் கட்டுப்படுத்தும் நிலைமையையும் ஏற்படுத்தும்.

எனவே, அரசியல் கட்சிகளின் சாலைப் பேரணி மற்றும் பொதுக்கூட் டங்களுக்கு அரசின் சார்பில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள விதிமுறைகளை மாற்றி அமைக்க வேண்டும். இதுகுறித்து அரசியல் அமைப்புகள் மற்றும் பொதுநல இயக்கங்களின் கருத்துக்களையும் கேட்டு தீர்மானிக்க வேண்டும் என்று கழக நிர்வாகக் குழு கேட்டுக்கொள்கிறது.



## வார இறுதி நாள்களை முன்னிட்டு 940 சிறப்புப் பேருந்துகள் இயக்கம்

சென்னை, நவ,08-

வார இறுதி நாள்களை முன்னிட்டு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் 940 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. கிளாம்பாக்கத்தில் இருந்து இன்று 340 சிறப்புப் பேருந்துகளும், 8ம் தேதி 350 சிறப்புப் பேருந்துகளும் இயக்கப்பட உள்ளன. கோயம்பேட்டில் இருந்து இன்றும் நாளையும் தலா 55 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

## திருச்சியில் ஆல் இந்தியா நெட்வொர்க் அசோசியேஷன் சார்பில் காரைக்கால் கலந்தாய்வு கூட்டம்

திருச்சி, நவ.08-

2026 சட்டமன்றத் தேர்தலில் யாருக்கு நமது ஓட்டு..? தமிழ்நாடு முழுவதும் பல லட்சம் நெட்வொர்க் உறுப்பினர்கள் உள்ளனர்.

மூன்று அம்ச கோரிக்கை:

நேரடி வர்த்தகத்தை வரைமுறைப்படுத்தும் வகையில் கேரளாவை போல சட்டம் இயற்றி தனி வாரியம் அமைக்க வேண்டும். அதன் மூலம் மக்களை ஏமாற்றும் போலி நிதி நிறுவனங்களிடம் இருந்து மக்களை காப்பாற்ற வேண்டும்.



நிதி நிறுவனங்களிடம் ஏமாற்றப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைக்க முன்னாள் நீதிபதி தலைமையில் ஒரு ஆணையும் அமைத்து குறிப்பிட்ட காலத்திற்குள் நிவாரணம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். நெட்வொர்க் துறையில் ஈடுபட்டுள்ள லட்சக்கணக்கானோர் பயன்படும் வகையில் நல வாரியம் அமைக்க வேண்டும். போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி மாபெரும் விளக்க கூட்டம் இன்று காலை 10 மணி அளவில் எல்.கே.எஸ். திருமண மண்டபம் திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் நடைபெற உள்ள நிலையில், பாண்டிச்சேரி மாநிலம் காரைக்காலில் தனியார் அரங்கில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.



## விசாரணைக்கு ஆஜராக நடிகர் ஸ்ரீகாந்திற்கு அமலாக்கத்துறை மீண்டும் சம்மன்

சென்னை, நவ.08-

போதைப் பொருள் வாங்கியதில் சட்டவிரோத பணப்பரிமாற்றம் நடந்ததாக பதிவு செய்த வழக்கின் விசாரணைக்கு ஆஜராக நடிகர் ஸ்ரீகாந்திற்கு அமலாக்கத்துறை மீண்டும் சம்மன் அனுப்பியுள்ளது. கடந்த 28ம் தேதி அனுப்பப்பட்ட சம்மனுக்கு ஆஜராகாத நிலையில், வரும் 11ம் தேதி ஆஜராக மீண்டும் சம்மன் அனுப்பப்பட்டுள்ளது.

# தேனி மாவட்டம் தும்மக்குண்டு கிராமத்தில் வீடு கட்டும் பணியின் போது வெளிப்பட்ட முதுமக்கள் தாழி: இந்தப் பகுதி ஒரு பரந்த "ஈமக்காடாக" அக்காலத்தில் விளங்கியிருக்க வேண்டும் தொல்லியல் ஆய்வாளர் செல்வம்

தேனி நவ.08-

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி வட்டம் வருசநாடு அருகே உள்ள தும்மக்குண்டு கிராமத்தில், முதல்பாண்டி என்பவர் வீடு கட்டும் பணிக்காக பள்ளம் தோண்டியபோது முதுமக்கள் தாழி ஒன்று தற்செயலாக வெளிப்பட்டிருக்கிறது. அதைக் கண்ட அப்பகுதி மக்கள் கடமலைக்குண்டு, அரசு மேல்நிலைப் பள்ளி முதுகலை ஆசிரியரும் தொல்லியல் ஆய்வாளருமான செல்வத்திடம் தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்துக்கு நேரில் சென்று பார்வையிட்ட ஆய்வாளர் செல்வம் இதுகுறித்து கூறியதாவது,

தமிழகத்தின் தொல்லியல் வரைபடத்தில், தேனி மாவட்டம் ஒரு வளமான வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது. வைகை நதி நாகரிகத்துடன் நெருங்கிய தொடர்புடைய இப்பகுதியில், சங்ககால மற்றும் அதற்கு முந்தைய காலத்தின் வாழ்ந்த மக்கள் விட்டுச் சென்ற, எண்ணற்ற தொல்லியல் எச்சங்கள் புதைந்து கிடக்கின்றன. இதன் தொடர்ச்சியாக, தும்மக்குண்டு கிராமத்தில், முதல்பாண்டி என்பவரது வீட்டு உபயோகத்திற்காக செப்டிக் டேங்க் கிடங்கு தோண்டியபோது, தரையிலிருந்து சுமார் 2.5 அடி ஆழத்தில் ஒரு முழுமையான முதுமக்கள் தாழி கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது ஒரு தற்செயல் நிகழ்வாகத் தோன்றினாலும், இப்பகுதியின் தொன்மையான பண்பாட்டு அடுக்கை வெளிக்காட்டும் ஒரு முக்கிய நிகழ்வாக கருதவேண்டியுள்ளது.

தரைமட்டத்திலிருந்து 2.5 அடி ஆழத்தில் புதைந்துள்ள இத்தாழி, உயரம் 3 அடி உயரமும் ,நடு மையத்தின் விட்டம்: 2.5 அடியாகவும உள்ளது. இந்த அளவுகள், இது ஒரு பெரிய, நன்கு வனையப்பட்ட தாழி என்பதையும், ஒரு குறிப்பிட்ட நபரின் நினைவாகப் பிரத்யேகமாக உருவாக்கப்பட்டிருக்கலாம் என்பதையும் சுட்டுகிறது.

தாழி களிமண்ணால் செய்யப்பட்டு அதன் மேற்பரப்பு வழு வழுப்பாக மெருகூட்டப்பட்டுள்ளது. சுடுவதற்கு முன் செங்காவி பூச்சு பூசப்பட்டிருக்கிறது. கயிறு போன்ற அல்லது கீறல் போன்ற அலங்கார வேலைபாடுகளும் உள்ளது.

முதுமக்கள் தாழி என்பது அக்காலத்திய மக்களின் இறையியல்,



சமூக படிநிலை மற்றும் தொழில்நுட்ப அறிவின் ஒரு கலவை, தாழியின் உள்ளடக்கங்கள் இதை மெய்ப்பிக்கின்றன:

தாழிக்குள் ஐந்திற்கும் மேற்பட்ட வெவ்வேறு அளவிலான மண் சட்டிகள் மற்றும் கலயங்கள் இருந்துள்ளன. இவை "ஈமப் பொருட்கள்" என வகைப்படுத்தப்படுகின்றன. இறந்தவர், தனது மரணத்திற்குப் பின்னான வாழ்விலும் பயன்படுத்தக்கூடும் என்ற நம்பிக்கையில் உணவு, தானியங்கள் அல்லது நீர் போன்றவற்றை வைத்துப் புதைத்திருக்கலாம்.

கருப்பு சிவப்பு மட்பாண்டத் தொழில்நுட்பம், தமிழகத்தில் இரும்புக்காலம் எனப்படும் பெருங்கற்காலத்தின் (சுமார் 2500 முதல் 5000 வரை) ஒரு முக்கிய அடையாளமாகும். சில கலசங்களில் "எலும்புகள் நொறுங்கிய நிலையில்" காணப்பட்டிருப்பது, இது ஒரு "இரண்டாம் நிலை புதைப்பு" முறை என்பதற்கான திடமான சான்றாகும். அதாவது, இறந்தவரின் உடலை முதலில் வேறு இடத்தில் வைத்து, அது மக்கித் தசைகள் பிரிந்த பின், எஞ்சிய எலும்புகளை மட்டும் சேகரித்து, அவற்றுடன் ஈமப் பொருட்களையும் சேர்த்துத் தாழியில் வைத்துப் புதைப்பதே இந்தப் பழக்கமாகும்.

பெருங்கற்கால மக்கள், தங்கள் வாழ்வாதாரத்திற்காக (வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மட்பாண்ட தொழில், இரும்பு உருக்கு) நீர் ஆதாரங்களுக்கு அருகிலேயே, அதாவது ஆற்றோரப் பகுதிகளிலேயே, தங்கள் குடியிருப்புகளை அமைத்திருந்தனர்.

ஆனால், அவர்கள் இறந்தவர்களைப் புதைக்கவும், நினைவுச் சின்னங்களை எழுப்பவும், ஆற்றோரப் பகுதிகளைத் தவிர்த்து, சற்று உயரமான, வெள்ளத்தால் பாதிக்கப்படாத "மேட்டுப் பாங்கான" பகுதிகளைத் தேர்ந்தெடுத்தனர். இது, வாழ்விடத்தையும் ஈமக்களத்தையும் பிரித்துப் பார்க்கும் ஒரு முதிர்ந்த சமூகப் பண்பாட்டைக் காட்டுகிறது.

தும்மக்குண்டு கிராமத்தில், வீடுகள் கட்டும் பணிகள் நடக்கும் "மேட்டுப் பகுதியில்" இந்தத் தாழிகள் தொடர்ந்து கிடைப்பதாகக் கூறப்படுவது, இந்தப் பகுதி ஒரு பரந்த "ஈமக்காடாக" அக்காலத்தில் விளங்கியிருக்க வேண்டும் என்பதை வலுவாகச் சுட்டுகிறது.

எனவே, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை உடனடியாக இப்பகுதியில் ஒரு "மீட்பு அகழாய்வு" அல்லது குறைந்தபட்சம் ஒரு "மேற்பரப்பு களாய்வை யாவது" மேற்கொள்வது அவசியமாகிறது. இதன் மூலம், சிதறிக் கிடக்கும் இந்த வரலாற்றுச் சங்கிலிகளை இணைத்து, தேனி மாவட்டத்தின் பெருங்கற்காலப் பண்பாட்டை முழுமையாகப் புனரமைக்க இயலும் என்று கூறினார்.



# சுமைப்பணி தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை வழங்கக்கோரி சிஐடியுவினர் ஆர்ப்பாட்டம்

திருச்சி, நவ.08-

திருச்சி காந்தி மார்கெட் பகுதியில் ரெகுலர் லாரி செட்களில் சுமார் 350 பேர் சுமைதூக்கும் தொழிலாளர்களாக கடந்த 25 ஆண்டுகளாக வேலை செய்து வருகின்றனர். லாரிகளில் வரும் மூட்டைகளை ஏற்றி, இறக்கி விடுவதும் அதற்குரிய உருப்படிக்கான (பீஸ் ரேட்) பெற்று கொள்வது, சில லாரி செட்டுகளில் லாரி வாடகையில் கமிஷன் கூலி என்ற முறையில் வாங்கி கொள்வது, வேலைக்கு ஏற்ற வாரே கூலி என்ற நடைமுறையே இருந்து வருகிறது. இந்நிலையில் சேகர் பிரதர்ஸ் என்ற லாரி செட்டில் கடந்த 20 ஆண்டுகளாக வேலை செய்து வந்த 12 சுமை பணி தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்யும் திட்டத்தோடு

வேலை தராமல் அதே முதலாளி வேறு ஒரு இடத்தில் சி.எம் லேஜஸ்டிக் என்ற பெயரில் பெயரை மாற்றி லாரிகளை அங்கு கொண்டு சென்று குறைந்த கூலிக்கு வேறு ஆட்களை வைத்து வேலை செய்ய முயற்சித்து வருகிறார். இதனால்


கடந்த 75 நாட்களாக 12 சுமைதூக்கும் தொழிலாளர்கள் வேலை யிழந்து பசியால் வாடி வருகிறார்கள். இந்நிலையில் காவல்துறை பரிந்துரை பெயரில் தொழிலார் இணை ஆணையர் தலையிட்டு

விசாரணை செய்து 12 தொழிலாளர்களுக்கும் வேலை வழங்க வேண்டும் என எழுத்து பூர்வமான உத்தரவு பிறப்பித்தார். மேற்கண்ட உத்தரவு வழங்கப்பட்டு 25 நாட்கள் ஆன பின்பும் அரசு அதிகாரிகள் , காவல் துறையினர் தொழிலாளர்களை வேலைக்கு சேர்த்து விட எந்தவித நடவடிக்கையும் எடுக்காத போக்கை கண்டித்து சிஐடியுலாரி லாரி புக்கிங் ஆபிஸ் லோடுமேன் ஜெனரல் ஒர்க்கர்ஸ் யூனியன் சார்பில் வெள்ளியன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்திற்கு சி.ஐ.டி.யு லாரி புக்கிங் ஆபிஸ் லோடுமேன் ஜெனரல் ஒர்க்கர்ஸ் யூனியன் மாவட்ட செயலாளர் ஜி.கே.ராமர் தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தை விளக்கி சிபிஎம் மாவட்ட செயற்குழு உறுப்பினர் ராஜா, சுமைப்பணி சங்க மாவட்ட தலைவர் தக்காளி ரமேஷ், மாவட்ட துணைத்தலைவர் தக்காளி செந்தில், தக்காளி மண்டி சங்க நிர்வாகி ஆரோக்கியம், லாரி செட் சங்க துணைத் தலைவர் ராமர், லாரி செட் சங்க பொருளாளர் மூர்த்தி ஆகியோர் பேசினர். இதில் ஏராளமான சுமைப்பணி தொழிலாளர்கள் கலந்துகொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷமிட்டனர்.

# 15.B மேட்டுபட்டி ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

அலங்காநல்லூர், நவ.08-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள 15.B மேட்டுப்பட்டி கிராமத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுந்தரி, வள்ளி, கலந்துகொண்டு குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தனர். இந்த முகாமில் மகளிர் உரிமைத் தொகை, பட்டா மாறுதல், மருத்துவ காப்பீடு, பொது மக்களுக்கு மருத்துவ பரிசோதனை, கூட்டுறவுத்துறை, காவல்துறை சார்ந்த மனுக்கள், ஆதார் அட்டையில் திருத்தங்கள், உள்ளிட்ட பல்வேறு மனுக்களை அந்தந்த துறைச் சார்ந்த




அரங்குகளில் உள்ள அலுவலர்களிடம் பொது மக்கள் வழங்கினர். இதில் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரேணுகா, கண்ணன், ஜெயபிரகாஷ், ஊராட்சி செயலர்கள் நாகராஜ், முருகேஸ்வரி, உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# "பெண்கள் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கியதற்கு வெட்கி தலைகுனிய வேண்டாமா?" ஸ்டாலினுக்கு இபிஎஸ் கண்டனம்

சென்னை, நவ.08-

தமிழ்நாட்டில் பெண்கள் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கியதற்கு முதல்வர் ஸ்டாலின் வெட்கித் தலைகுனிய வேண்டாமா? என எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளட்தில், "தமிழ்நாடு, பெண்களுக்குப் பாதுகாப்பானதா? கோவையில் சாலையில் நடந்து சென்ற பெண் ஒருவர் காரில் கடத்தப்படுவது போன்ற சிசிடிவி காட்சிகள் செய்திகளில் வந்துள்ளன. திமுக ஆட்சிக்கு வந்த நான்கரை ஆண்டுகளில் பெண்கள் பாதுகாப்பை முற்றிலுமாக Compromise செய்திருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

கோவை கல்லூரி மாணவி பாலியல் வன்கொடுமை செய்தி வந்த மூன்றாவது நாளே, அதே கோவையில், பெண் கடத்தப்படும் சிசிடிவி காட்சி வெளிவருவது, திமுக



ஆட்சியில் குற்றவாளிகளுக்கு கொஞ்சம் கூட சட்டத்தின் மீதோ, காவல்துறை நடவடிக்கை மீதோ அச்சமே இல்லை என்பதையே காட்டுகிறது.

எந்த நேரத்திலும், எங்கும் பெண்களால் நிம்மதியாக, பாதுகாப்பாக இருக்க முடியாத ஒரு பதற்றமான நிலையை உருவாக்கிவிட்டு, இந்த அரசை "பெண்களுக்கான அரசு" என்று கூறுவதற்கு முதல்வரும், அவரது மகனும் கூச்சப்பட வேண்டும்.

தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் என்று உங்கள் பெயருக்கு பின்னால் வைத்துள்ள முதல்வர் ஸ்டாலின், தமிழ்நாட்டில் பெண்கள் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கியதற்கு வெட்கித் தலைகுனிய வேண்டாமா?

மேற்கூறிய சம்பவங்கள் குறித்து உரிய விசாரணையை துரிதப்படுத்தி, பெண்களைக் கண்டுபிடித்து, குற்றவாளிகள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஸ்டாலின் மாடல் திமுக அரசை வலியுறுத்துகிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

# திண்டுக்கல் 11வது வார்டு காமராஜர்புரம் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு விரைவில் பட்டா வழங்கப்படும் அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி

## 11வது வார்டு முன்னாள் மாமன்ற உறுப்பினர், செயலாளர் ஆறுமுகம் மறைவிற்கு இல்லம் தேடிவந்து ஆறுதல் தெரிவித்ததோடு நிதியுதவி வழங்கினார்

சின்னாளபட்டி, நவ.08-

திண்டுக்கல் 11வது வார்டு முன்னாள் மாமன்ற உறுப்பினர், செயலாளர் ஆறுமுகம் மறைவிற்கு, இல்லம் தேடிவந்து ஆறுதல் தெரிவித்த ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் நிதியுதவியும் வழங்கினார். அப்போது அப்பகுதியை சேர்ந்த பொதுமக்களிடம் விரைவில் காமராஜர்புரம் பகுதியில் வசிக்கும் மக்கள் 91பேருக்கு பட்டா வழங்கப்படும் என அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி அளித்தார்.

திண்டுக்கல் மாநகராட்சிக்கு உட்பட்ட 11வது வார்டு முன்னால் மாமன்ற உறுப்பினராகவும், வார்டு செயலாளராகவும் இருந்தவர் ஆறுமுகம் இவர் மறைவின்போது அமைச்சர் சென்னையில் இருந்ததால் நேரில் வந்து அஞ்சலி செலுத்த முடியவில்லை. வெள்ளிக்கிழமை 10மணியளவில் திண்டுக்கல்



மலைக்கோட்டை அடிவாரம் காமராஜர் புரத்தில் வசித்து வந்த மறைந்த 11வது வார்டு செயலாளர் ஆறுமுகம் மறைவிற்கு ஆறுதல் தெரிவிக்க அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் ஆறுமுகம் இல்லத்திற்கு வந்து அவருடைய மனைவி மற்றும் மகன், மகளுக்கு ஆறுதல் கூறியதோட நிதியுதவியும் வழங்கினார். கழகம் உங்கள் குடும்பத்தை கைவிடாது என கூறிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற நிலை இல்லாமல் அனைவரையும் சமத்துவத்துடன் பார்க்கும் மக்களுக்கான ஆட்சிதான் திராவிடமாடல் ஆட்சி என்றார். அப்போது அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் விடுபட்டு போன 91பேருக்கு பட்டா வழங்க வேண்டுமென கோரிக்கைவிடுத்தனர். அவர்கள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் விரைவில் அனைவரையும் நேரில் அழைத்து விடுபட்டுபோன 91பேருக்கு பட்டா வழங்கப்படும் என்றார். அதற்கு அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு மனதார பாராட்டும் நன்றியும் தெரிவித்தனர். நிகழ்ச்சியின் போது திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், திண்டுக்கல் மாநகர துணை மேயர் ச.ராஜப்பா, பகுதி செயலாளர் சந்தோசமுத்து, வடக்கு மண்டல தலைவர் ஆனந்த், மாமன்ற உறுப்பினர்கள் நெல்லை சுபாஷ், மாரியம்மாள், வார்டு நிர்வாகிகள் சங்கரலிங்கம், கண்ணன், ஆரோக்கியம், தாஸ், தகவல் தொழில்நுட்ப அணியை சேர்ந்த அசோக் (எ) அஸ்வத்தமா, உட்பட இளைஞர் அணியினர், மகளிர் அணியினர் பலர் உடனிருந்தனர்.



# திருச்சி தில்லை நகரில் மத்திய, வடக்கு மாவட்ட திமுக கூட்டணி கட்சிகள் ஆலோசனை கூட்டம்

திருச்சி, நவ.08-

திருச்சி மத்திய மாவட்ட திமுக செயலாளர் க.வைரமணி, வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ந.தியாகராஜன் எம்.எல்.ஏ. ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

திருச்சி மத்திய, வடக்கு மாவட்ட தி.மு.க மற்றும் தோழமைக்கட்சிகளின் ஆலோசனை கூட்டம் (8 ந்தேதி) காலை 9 மணியளவில் தில்லை நகர் கழக முதன்மை செயலாளர் அலுவலகத்தில் மத்திய மாவட்ட செயலாளர் க.வைரமணி தலைமையிலும், வடக்கு மாவட்ட செயலாளர் ந.தியாகராஜன் எம்.எல்.ஏ,மாநகர செயலாளர் மு.அன்பழகன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறவிருக்கின்றது. கூட்டத்தில் இந்திய தேர்தல் ஆணையம் நடத்தும் சிறப்பு தீவிர வாக்காளர் சீராய்வு நடைமுறையை கண்டித்து நடைபெற இருக்கும் கண்டன ஆர்ப்பாட்டம் குறித்து ஆலோசிக்கப்படுகிறது. எனவே இக்கூட்டத்தில் திமுக மற்றும் தோழமைக்கட்சிகளின் மாவட்ட நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுகிறோம். இவ்வாறு அவர்கள் அந்த அறிக்கையில் கூறியுள்ளனர்.

# உடுமலையில் "வெற்றி நிச்சயம்" திட்டத்தில் கட்டணமில்லா இறைச்சி மற்றும் இறைச்சி பொருட்கள் தயாரிப்பு பயிற்சி

உடுமலைப்பேட்டை, நவ.08-

உடுமலைப்பேட்டை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொழில்நுட்பத் துறையில், இறைச்சி மற்றும் இறைச்சி பொருட்களை பதப்படுத்தும் உதவியாளர் குறித்த கட்டணமில்லா பயிற்சி வழங்கப்பட உள்ளது. தமிழக அரசின் வெற்றி நிச்சயம் திட்டத்தின் கீழ், வரும் நவம்பர் 19 ம் தேதி முதல் தொடர்ந்து 25 நாட்களுக்கு கட்டணமில்லா பயிற்சி வழங்கப்பட உள்ளது. இப்பயிற்சியில், 25 பேருக்கு வணிகரீதியில் இறைச்சி மற்றும் இறைச்சி பொருட்களை பதப்படுத்தும் தொழில் நுட்பங்கள் விளக்கமாக கற்பிக் கப்படும். கல்வித் தகுதி 10 ம் வகுப்பு தேர்ச்சி. 18 முதல் 35 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும். 25 நாட்களும் பயிற்சியில் பங்கேற்க வேண்டும். பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர்,இன்று முதல் முன்பதிவு செய்ய வேண்டும். முன்பதிவு செய்ய கீழ்கண்ட இணையதளத்தில் (www.tn-skill.gov.in) பதிவு செய்ய வேண்டும். மேலும் இதுகுறித்து விவரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர் அவர்களை நேரடியாக அல்லது 9677688989, 9442617605 ஆகிய அலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ்நாரணவரே, தெரிவித்துள்ளார்கள்.



■ 199, பெரியகுளம் சட்டமன்ற தொகுதிகுட்பட்ட தேனி அல்லிநகரம் நகராட்சி ஓடைத்தெருப் பகுதிகளில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் (Special Intensive Revision) மேற்கொள்வது தொடர்பாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் வாக்காளர் கணக்கீட்டு படிவம் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டு வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் நேரில் பார்வையிட்டார்



# ஊருக்குள் வெள்ளம் என்ன காரணம் தமிழ்நாடு மின் உற்பத்தி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் கோவிந்தராவ் நேரில் ஆய்வு

தேனி, நவ.08-

தேனி மாவட்டம் உத்தமபாளையம் தாலுகா பண்ணைப்புரம், அரசு பள்ளி மற்றும் கோம்பை பகுதியில், கடந்த நான்காம் தேதி பெய்த தொடர் கன மழையால் 18 ஆம் கால்வாய் உடைப்பு ஏற்பட்டு வெள்ளம் ஊருக்குள் புகுந்ததால் மக்கள் பெரிதும் அவதிக்குள்ளாகினர். அப்பகுதியில் உள்ள விவசாய நிலங்கள் மற்றும் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால் போக்குவரத்து மற்றும் விவசாயம் பெரிதும் பாதிப்புக்கு உள்ளானது. பின்னர் பொதுப்பணித்துறை தற்காலிகமாக மணல் மூட்டைகள் கொண்டு உடைப்பை சரி செய்தனர்.

இச்சம்பவம் அப்பகுதியில் மக்களை பெரிதும் வாட்டிய நிலையில் கண்காணிப்புக்குழு அலுவலர் தமிழ்நாடு மின் உற்பத்தி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் கோவிந்தராவ் மற்றும் துணை ஆட்சியர், வருவாய் கோட்டாட்சியர் வட்டாட்சியர் சையது முகமது உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் அப்பகுதியை நேரில் ஆய்வு செய்தனர்.

பதினெட்டாம் கால்வாயில் எவ்வாறு உழைப்பது ஏற்பட்டு வெள்ளம் ஊருக்குள் புகுந்தது என்ன காரணம் என்பதை நேரில் ஆய்வு செய்து அதனை முறையாக உடைப்பை சரி செய்ய வேண்டும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.



# உடுமலையில் பொது கூட்டத்தில் விடியல் அரசில் சட்ட ஒழுங்கு சீர் கேடு மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் உரை

திருப்பூர், நவ.08-

திருப்பூர் தெற்கு மாவட்ட சார்பாக உடுமலை நகரில் பா.ஜ.க மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் பொது கூட்டத்தில் விடியல் அரசின் சட்ட ஒழுங்கு சீர் கேடுகளை எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில் திருப்பூர் தெற்கு மாவட்ட தலைவர் மோகனபிரியா சரவணன், உடுமலை நகர மன்ற தலைவர் பாலகுரு, கூட்டணி கட்சி அ.இ.அதிமுக எம்.எல்.ஏ கள் பொள்ளாச்சி ஜெயராமன், உடுமலை ராதாகிருஷ்ணன், மடத்துக்குளம் மகேந்திரன், பல்லடம் எம்.எஸ்.எம் ஆனந்தன், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். மாவட்ட மகளிரணி தலைவர் பரிமளா சுப்பிரமணிய 100க்கு மேற்பட்ட மகளிர்கள் பொதுக்கூட்டத்திற்கு அழைத்து வந்தார். தெற்கு மண்டல பா.ஜ.க. தலைவர்



துர்கா ஈஸ்வரசாமி 500க்கு மேற்பட்ட பா.ஜ.க நிர்வாகிகள் தொண்டர் அழைத்து வந்தார். உடன் ஒன்றிய துணை தலைவர் தினேஷ்குமார், ஒன்றிய பொதுச் செயலாளர் விஜியன். இப்பொதுக் கூட்டத்திற்கு உடுமலை நகரம் திருப்பூர் தெற்கு மாவட்டம் பா.ஜ.க நிர்வாகிகள், தொண்டர்கள், கலந்து கொண்டார்கள். இக்கூட்டம் உடுமலை நகர வெங்கடகிருஷ்ணா ரோட்டில் 6.11.2025 அன்று மாலை நடைபெற்றது.



# கொசு தொல்லை: நடவடிக்கை கோரி புதுச்சேரியில் கொசு வலை போர்த்தி நூதன போராட்டம்

புதுச்சேரி. நவ.08-

புதுச்சேரி முழுவதும் கொசு மருந்து அடிக்க வலியுறுத்தி அதிமுக உரிமை மீட்புக் குழு சார்பில் கொசு வலையை போர்த்திக்கொண்டு முற்றுகை போராட்டம் நடந்தது.

மழைக்காலம் தொடங்கியதன் காரணமாக புதுச்சேரி முழுவதும் கொசுக்கள் அதிக அளவில் உருவாகி பொது மக்களுக்கு பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றன. இதனைத் தொடர்ந்து மாநிலம் முழுவதும் கொசு மருந்து அடிக்க வலியுறுத்தி, அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழு சார்பில் மாநில செயலர் முன்னாள் எம்எல்ஏ ஓம்சக்தி சேகர் தலைமையில், புதுச்சேரி குயவர்பாளையம் ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் அமைந்துள்ள மலேரியா துணை இயக்குநர் அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டம் இன்று நடைபெற்றது.

கொசு வலை போர்த்திக்கொண்டு மற்றும் கொசு பேட் ஆகியவற்றை கையில் ஏந்தியவாறு "ஒழித்திடு, ஒழித்திடு ரூ கொசுக்களை ஒழித்திடு!", "அடித்திடு, அடித்திடு - கொசு மருந்து அடித்திடு!" எனக் கோஷங்கள் எழுப்பியவாறு, அலுவலகத்தை முற்றுகையிட்டனர். போராட்டத்தைத் தொடர்ந்து, திட்ட அதிகாரி முருகனை நேரில் சந்தித்து, உடனடியாக மாநிலம் முழுவதும் கொசு மருந்து அடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை மனு வழங்கப்பட்டது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய முன்னாள் எம்எல்ஏ ஓம்சக்தி சேகர், "சமீப காலங்களில் பெய்த மழை காரணமாக நீர் தேங்கி, கொசு உற்பத்தி அதிகரித்து, பொதுமக்கள், சிறுவர்கள், பெரியவர்கள் அனைவரும் சொல்ல முடியாத துயரங்களை அனுபவித்து வருகின்றனர். டெங்கு உள்ளிட்ட காய்ச்சல் அதிகரித்து, அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் மக்கள் அலைமோதும் நிலை ஏற்பட்டுள்ளது.

உடனடியாக மாநிலம் முழுவதும் கொசு மருந்து அடிக்கும் பணிகளை விரைவுபடுத்தி, சுகாதார அவசர நிலை ஏற்படுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அரசு மருத்துவமனையில் டெங்கு காய்ச்சலுக்கு தனி வார்டு அமைத்து போதிய மருந்துகளை வைத்திருக்க வேண்டும். நடவடிக்கை எடுக்காவிட்டால் சுகாதார அலுவலங்களை முற்றுகையிடுவோம்." என்று கூறினார்.

# "மனநலம் பாதிக்கப்பட்டவர் போல டிடிவி தினகரன் பேசி வருகிறார்" - ஆர்.பி. உதயகுமார் காட்டம்





மதுரை, நவ.08-

"முதலமைச்சராக இருக்கும் போதே ஜெயலலிதா சிறைக்கு சென்றதற்கு யார் காரணம்? அந்த பாவமெல்லாம் சும்மா விடாது. மனநலம் பாதிக்கப்பட்டவர் போல டிடிவி.தினகரன் பேசி வருகிறார்" என்று சட்டசபை எதிர்கட்சித் துணைத்தலைவர் ஆர்பி. உதயகுமார் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மதுரையில் இன்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: இன்றைக்கு ஆளும் மக்கள் விரோத திமுக அரசை பற்றி எதுவும் பேசாமல், தினந்தோறும் பத்திரிகையாளர்களை சந்தித்து தினகரன் ஏதேதோ கூறி வருகிறார். அவர் என்ன கூறுகிறார் என்று நாட்டு மக்களுக்கு புரியவில்லை. அவருக்கும் புரியவில்லை. அவர் தொடங்கிய அமமுக கட்சியை பற்றி பேசாமல், விஜயையும், திமுகவையும் தூக்கிப்பிடித்து பேசி வருகிறார்.

அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்து கூட 10 ஆண்டு காலம் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர் தினகரன். என் முகத்தில் விழிக்கக் கூடாது என்று கூட ஜெயலலிதா உத்தரவிட்டார். அதனால் தமிழகத்திற்கு வராமல் புதுச்சேரியில் தன்னுடைய தோட்டத்து பங்களாவில் தங்கி பதுங்கி இருந்தவர் தினகரன். ஜெயலலிதா ஒருவரை தகுதி நீக்கம் செய்கிறார் என்றால், அது ஆண்டவனே செய்ததற்கு அர்த்தம்.

தற்போது வலிமையோடு வெற்றிப்பாதையில் சென்று கொண்டிருக்கும் அதிமுக மீதும், பொதுச்செயலாளர் பழனிசாமி மீதும் தினமும் அவதூறு பரப்புவதையே வேலையாக கொண்டிருக்கிறார் தினகரன். ஜெயலலிதா மறைவுக்கு பின் தொண்டர்கள் உழைப்பு என்ன ஆகும்? தொண்டர்களெல்லாம் அகதிகளாகவும், ஆதரவு அற்றவர்களாகவும் இருந்த பொழுது இரண்டு கோடி தொண்டர்கள் சுதந்திர காற்றை சுவாசிக்கச் செய்தவர் பழனிசாமி.

அதிமுக தற்போது 75 சட்டமன்ற உறுப்பினர்களுடன் பிரதான எதிர்க்கட்சியாகவும் இருந்து வருகிறது. ஆனால், ஒரு எம்எல்ஏ கூட இல்லாத டிடிவி.தினகரன் அதிமுகவை பற்றி பழித்து பேசி வருகிறார். மனோஜ் பாண்டியன் சட்ட ஞானம் கொண்டவர். அவர் திமுகவுக்கு சென்றதற்கு கூட பழனிசாமிதான் காரணம் என வாய் கூசாமல் தினகரன் பொய் பேசுகிறார்.

தினகரனுடன் இருந்த செந்தில் பாலாஜி, பழனியப்பன், மாரியப்பன், கென்னடி, தங்க தமிழ்ச்செல்வன், உமாதேவன், உசிலம்பட்டி மகேந்திரன் உள்ளிட்ட நபர்கள் எல்லாம் ஏன் அவரை விட்டு விலகி வெளியே வந்தார்கள்? இதற்காக நேரம் ஒதுக்கி சிந்தித்தாரா? செந்தில் பாலாஜியை ஏன் திமுகவுக்கு அனுப்பி வைத்தீர்கள்?

உங்களை நம்பி வந்த 18 சட்டமன்ற உறுப்பினர்கள் இன்று அரசியல் அனாதைகளாக இருக்கிறார்கள். உங்களை நம்பி வந்த வெற்றிவேல், மேலூர் சாமி உங்களுக்காக பல தியாகம் செய்தவர்கள். அவர்களைப் பற்றி நீங்கள் சிந்தித்தீர்களா?

ஜெயலலிதாவின் மறைவிற்கு பின்பு ஆட்சியையும், கட்சியையும் கொள்ளையடிக்க திட்டம் போட்டீர்கள். பழனிசாமியிடம் உங்கள் பருப்பு வேகவில்லை. அது நிகழாமல் போனதால் அந்த விரக்தி காரணமாக வாய்க்கு வந்ததை மனநலம் பாதிக்கப்பட்டவர் போல் பேசிக் கொண்டிருக்கிறார். கே.பழனிசாமி மீது ஏன் கொடநாடு சம்பவம் குறித்து நடவடிக்கை எடுக்கவில்லை என்று டிடிவி.தினகரன் கூறுகிறார்.

இது குறித்து சட்டமன்றத்தில் நீண்ட விவாதம் நடைபெற்றுள்ளது. அதற்கான சட்டமன்ற பதிவு உள்ளது. நீங்கள் சட்டமன்றம் செல்லவில்லையென்றால், பார்த்து கேட்டு தெரிந்து கொள்ளுங்கள். போயஸ் கார்டனில் சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் பற்றி கடிதம் இருந்தது அதை நான் கிழித்து விட்டேன் என்று டிடிவி தினகரன் கூறுகிறார்.

இப்படி ஒரு கீழ்த்தரமான சிறுமையான அரசியல் செய்து, வெறும் வாயில் அவலை மெள்ளுகுகிறார். பொதுவெளியில் எதை வேண்டுமானாலும் பேசலாமா? வாய்க்கு வந்ததை கொச்சைப்படுத்தி அவதூறாக பேசுகிறார். இவருக்கு என்ன தான் பிரச்சினை என்று தெரியவில்லை?. அமமுகவை துவங்கும் போது எவ்வளவு பேர் உங்களுக்கு தோள் கொடுத்து நின்றார்கள். அவர்களில் எவ்வளவு பேரை சட்டமன்ற உறுப்பினர்களாக ஆக்கினீர்கள்? தேர்தலில் மக்கள் உங்களை நிராகரித்து விட்டனர் என்பது உங்களுக்கு புரியவில்லையா? நீங்கள் மக்கள் பிரச்சினைகள் சார்ந்து எதுவும் செய்ததே இல்லை.

அதிமுகவை பற்றி பேசி கொண்டிருப்பதையே முழுநேர வேலையாக டிடிவி தினகரன் வைத்துள்ளார். உங்க கொசுக்கடி தாங்க முடியவில்லை. 'நானும் ரவுடி' தான் என்பது போல தினகரன் பரிதாபகரமான நிலைக்கு சென்று விட்டார். முதலமைச்சராக இருக்கும் போதே ஜெயலலிதா சிறைக்கு சென்றதற்கு யார் காரணம்? ஆண்டவனுக்கே வெளிச்சம். அந்த பாவமெல்லாம் சும்மா விடாது.

ஜெயலலிதாவிற்கு மருத்துவமனையில் வைத்து உரிய சிகிச்சை கொடுத்தீர்களா? என ஆயிரம் கேள்விகள் இருக்கின்றன. அதிமுக மூன்றாம் இடத்திற்கு வந்து விடும் என்று கூறுவது ஆடு நனைகிறதே என ஓநாய் அழுவது போல உள்ளது. உங்கள் பேச்சு, நடவடிக்கை எல்லாம் 23ம் புலிகேசி போல் உள்ளது. நீங்கள் தொடர்ந்து தரம் தாழ்ந்து பேசினால், நாங்களும் பதில் கொடுக்க தயாராக இருக்கிறோம்.

விஜய்யும் தன் தொண்டர்களை உற்சாக படுத்துவதற்காக திமுக தவெக இடையே தான் போட்டி என்கிறார். எல்லா கட்சிகளும் இப்படிதான் பேசியாக வேண்டும். பழனிசாமி தலைமையில் மெகா கூட்டணி அமையும்" என்றார்.

# தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற திருப்பூர் மாநகர் மாவட்ட குழு உறுப்பினர் தோழர் க.இராமசுப்பிரமணியன் நினைவஞ்சலி கூட்டம்




திருப்பூர், நவ.08-

தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற திருப்பூர் மாநகர் மாவட்ட குழு உறுப்பினரும் வடக்கு கிளை பொருளாளரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சாமுண்டிபுரம் கிளை உறுப்பினருமான தோழர் ராமசுப்பிரமணியன் அவர்களின் நினைவு அஞ்சலி கூட்டமானது வரும் 09.11.2025 வரும் ஞாயிறு மாலை 5.30 மணிக்கு ஊத்துக்குளி ரோடு பி கே ஆர் இல்லத்தில் நடைபெற உள்ளதாக, கலை இலக்கிய பெருமன்ற திருப்பூர் மாவட்ட தலைவர் பி.ஆர். நடராஜன் மற்றும் மாவட்ட செயலாளர் ஏ.வி.பழனிச்சாமி ஆகியோர் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

# காஞ்சிபுரம் அருகே தரைப்பாலத்தை மூழ்கடித்த வெள்ளம்: 10 கிராமங்களுக்கான போக்குவரத்து துண்டிப்பு

காஞ்சிபுரம், நவ.08-

காஞ்சிபுரம் அருகே தரைப்பாலத்தை வெள்ளம் மூழ்கடித்ததால் 10 கிராமங்களுக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டிருக்கிறது. காஞ்சிபுரம் அடுத்த பரந்தூர் பகுதியில் இருக்கக்கூடிய குணகரம்பாக்கம் பகுதியில் அமைந்திருக்கக்கூடிய தரைப்பாலத்தை மூழ்கடித்தவாறு வெள்ளம் ஆறு சென்று வருகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த சில தினங்களுக்கு முன்பு பெய்த தொடர் மழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கால் காஞ்சிபுரம் மாவட்டத்தில் நீர்நிலையங்கள் தொடர்ந்து நிரம்பி வருகிறது. அந்த வகையில் பரந்தூர் சுற்றுவட்டார ஏரியில் இருந்து வெளியேறிவரக்கூடிய உபரி நீர்கள் பேரம்பாக்கம் அருகே உள்ள கூவம் ஆற்றுக்கு இந்த தரைப்பாலத்தை கடந்து செல்கிறது. அங்கு சுற்றியிருக்கக்கூடிய கோட்டூர், எடையார் பாக்கம் என 10க்கும் மேற்பட்ட கிராமங்கள் தரைப் பாலத்தை போக்குவரத்துக்கு பயன்படுத்தி வருகின்றனர். மேலும் உபரி நீர் அதிகளவில் செல்வதால் குணகரம்பாக்கம் தரைப்பாலத்தில் மேல் 2 அடிக்கு வெள்ளநீர் சென்று வருகிறது. இதனால் அப்பகுதி முழுவதும் வெள்ளக்காடாக கட்சி அளிக்கிறது. ஏற்கனவே இரண்டு தினங்களுக்கு முன்பு இதே இடத்தில் ஒரு சிறுவன் நீரில் அடித்து செல்லப்பட்டு உயிரிழந்த நிலையில், அப்பகுதி மக்கள் ஆபத்தை கருத்தில் கொள்ளாமல் தொடர்ந்து ஆபத்தான முறையில் இருசக்கர வாகனத்தில் பயணம் செய்யது வருகின்றனர். இந்த சாலையில் போக்குவரத்து துண்டித்து மேலும் உயிரிழப்பு ஏற்படாமல் கண்காணிக்க வேண்டும் என காவல் துறை மற்றும் மாவட்ட நிர்வாகத்திற்கும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# எனது பேட்டியை விஜய்க்கு எதிராக சித்தரிப்பதை நிறுத்துங்கள்: அஜித்

சென்னை, நவ.08-

எனது பேட்டியை விஜய்க்கு எதிராக சித்தரிப்பதை தயவுசெய்து நிறுத்துங்கள் என்று அஜித் தெரிவித்துள்ளார்.


சமீபத்தில் அஜித் அளித்த பேட்டியொன்றில் கரூர் விவகாரம் உள்ளிட்ட பல விஷயங்கள் குறித்து பேசியிருந்தார். அதில் கரூர் விவகாரத்துக்கு ஒருவர் மட்டுமே காரணமல்ல, அதற்கு அனைவருமே பொறுப்பு என்று குறிப்பிட்டு இருந்தார் அஜித். அந்தப் பேட்டியை விஜய்க்கு எதிராக அஜித் பேசியிருப்பதாக இணையத்தில் பலரும் குறிப்பிட்டு இருந்தார்கள்.

இதனை மறுக்கும் வகையில் விளக்கமளித்து பேட்டியொன்று அளித்துள்ளார் அஜித். அப்பேட்டியில் அஜித், "நான் இதற்கு முன்பு அளித்த பேட்டியை விஜய்க்கு எதிராக சித்தரிக்கிறார்கள். எப்போதுமே விஜய்க்கு நல்லது செய்ய விரும்புகிறேன். எனது பேட்டியை விஜய்க்கு எதிராக சித்தரிப்பதை தயவுசெய்து நிறுத்துங்கள். கரூரில் நடந்தது ஒரு துரதிர்ஷடவசமான சம்பவம். இதற்கு முன்பு ஆந்திராவில் திரையரங்கம், பெங்களூரு கிரிக்கெட் விழா போன்றவற்றிலும், பல நாடுகளிலும் இது போன்று நடந்துள்ளது.

மேலும், பலர் என் வம்சாவளியைப் பற்றி கேள்வி எழுப்புகிறார்கள். என்னைப் பிடிக்காதவர்கள் எப்போதுமே வேற்று மொழி பேசுபவர் என்று சொல்கிறார்கள். அதே மக்கள் என்னை தமிழன் என்று ஆரவாரம் செய்யும் நாள் வரும். நான் கார் பந்தயத்தில் பெரிய சாதனை படைப்பேன். அப்போது முழு மாநிலமும், தேசமும் பெருமைப்படும். அதற்காக என் ஆன்மாவை அர்ப்பணிக்கப் போகிறேன்.

அனைவரும் உங்கள் குடும்பத்தை முதலில் கவனித்துக் கொள்ளுங்கள். என் படங்களை திரையரங்குகளில் பார்ப்பது சரி என நினைத்தால் பாருங்கள். நான் ஒருபோதும் என் படங்களைப் பார்க்க மக்களை வலியுறுத்தமாட்டேன். அதே போல் அரசியலில் வாக்கு கேட்க மாட்டேன். வாக்களிப்பதை ஒரு குடிமகனின் கடமையாகவே பார்க்கிறேன். தயவுசெய்து மோட்டார் விளையாட்டுகளை ஊக்குவியுங்கள். இப்போதும் நேர்காணல்கள் அளிப்பது அவற்றை ஊக்குவிக்க மட்டுமே. எப்போதுமே படங்களுக்கு விளம்பரம் தேவையில்லை. ஏனென்றால் அவை மக்களின் ஒரு பகுதியாக மாறிவிட்டது" என்று தெரிவித்துள்ளார்.

# பள்ளிகள், மருத்துவமனைகளில் தெரு நாய்கள் நுழையாதவாறு வேலி அமைக்க உச்ச நீதிமன்றம் உத்தரவு



புதுடெல்லி, நவ.08-

பள்ளிகள், மருத்துவமனைகள், பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள், விளையாட்டு மைதானங்கள் உள்ளிட்ட அனைத்து அரசு நிறுவனங்களிலும் தெருநாய்கள் நுழைவதைத் தடுக்க முறையாக வேலி அமைக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா, என்.வி. அஞ்சா ரியா ஆகியோர் அடங்கிய அமர்வு பிறப்பித்துள்ள உத்தரவில், "பள்ளிகள், மருத்துவமனைகள், பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள், விளையாட்டு மைதானங்கள் உள்ளிட்ட அனைத்து அரசு நிறுவனங்களிலும் தெருநாய்கள் நுழைவதைத் தடுக்க முறையாக வேலி அமைக்க வேண்டும்.

விலங்குகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவதற்கான விலங்கு பிறப்பு கட்டுப்பாடு விதிகள் 2023ன்படி, இத்தகைய வளாகங்களில் இருக்கும் தெருநாய்களைப் பிடித்து அவற்றுக்கு தடுப்பூசி போட வேண்டும். மேலும், அவற்றுக்கு கருத்தடை செய்ய வேண்டும். அதன் பிறகு அவற்றை நியமிக்கப்பட்ட தங்குமிடங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டும். உள்ளூர் அதிகாரிகள் இதற்கு பொறுப்பேற்க வேண்டும். இந்த இடங்களில் இருந்து பிடிக்கப்படும் தெருநாய்களை அதே இடத்தில் விடக்கூடாது. அவ்வாறு விடுவது, தீர்ப்பின் நோக்கத்தையே சீர்குலைக்கும்.

இந்த உத்தரவுகளை அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளும் 8 வாரங்களுக்குள் நிறைவேற்ற வேண்டும். தெருநாய்களை கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அனைத்து மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரேதச அரசுகள் அடுத்த விசாரணை தேதிக்கு முன்பாக பிரமாணப் பத்திரங்களை தாக்கல் செய்ய வேண்டும். இவ்விஷயத்தில், எந்த ஒரு மெத்தனமும் தீவிரமாகக் கருதப்படும்.

தேசிய நெடுஞ்சாலைகள், சாலைகள் மற்றும் விரைவுச் சாலைகளில் இருந்து தெரு நாய்கள் அகற்றப்படுவதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும். தவறுகளுக்கு அதிகாரிகள் பொறுப்பேற்க வேண்டும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.



■ தேனி மாவட்டம், தேனிஅல்லிநகரம் நகராட்சி கர்னல் ஜான் பென்னிகுயிக் பேருந்து நிலையத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் (Special Intensive Revision) பணிகள் தொடர்பாக விழிப்புணர்வு வீதி நாடகங்களை மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங் தொடங்கி வைத்து, பார்வையிட்டார்.



■ திருப்பூர் மாநகராட்சி கே.செட்டிபாளையத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகளான வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர்களின் இல்லத்திற்கு சென்று கணக்கெடுப்பு படிவம் வழங்கும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே பார்வையிட்டு ஆய்வுகள் மேற்கொண்டார். உடன் திருப்பூர் தெற்கு வட்டாட்சியர் செ. சரவணன் மற்றும் துறை அலுவலர்கள்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000